සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව

சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

Sabaragamuwa Provincial Department of Education

දෙවන වාර පරීක්ෂණය - 2018
இரண்டாம் தவணைப் பரீட்சை 2018
Second Term Test - 2018

07 ශ්‍රේණිය
தரம் 07
**Grade 07**

ගණිතය - **I**
கணிதம் - **I**
Mathemetics - **I**

පැය දෙකයි
இரண்டுமணித்தியாலம்
**Two hours**

பெயர் ..................................................................................................................................................................


* எல்லா வினாக்களுக்கும் விடைத் தருக.

<u>பகுதி **I**</u>

01. சுருக்குக.

$10 + 2 \times 5$

02. தரப்பட்ட உருவின் சுற்றளவைக் காண்க.





03. சுருக்குக.


| | kg | g |
|---|---|---|
| | 2 | 650 |
| + | 1 | 700 |
| | | |

04. திரு. ரட்ணம் அவர்கள் தனது வேலையை முடித்து வீட்டிற்கு பி.ப. 05.30 ற்கு வந்தார். அவர் வீட்டிற்கு வந்த நேரத்தை நியம முறையில் எழுதுக.

05. தரப்பட்ட உருவின் பரப்பளவைக் காண்க.



06. உருவில் நிழற்றப்பட்ட பகுதியை தசம எண்ணாகத் தருக.



07. கீழுள்ள தரவுகளுக்கு ஏற்ப 12, 18 இன் பொ.ம.சி. யைக் காண்க.


$12 = 2 \times 2 \times 3$

$18 = 2 \times 3 \times 3$


08. சுருக்குக.

$2.5 \times 10$

09. உருவில் தரப்பட்டுள்ள முக்கோணியின் சுற்றளவிற்கு சமனான சுற்றளவுள்ள சதுரத்தின் ஒரு பக்க நீளத்தைக் காண்க.




10. தரப்பட்டுள்ள உருவின் $\frac{3}{8}$ ஐ நிழற்றிக்காட்டுக.




11. சுருக்குக.


$5\frac{2}{5} - 2\frac{1}{5}$

12. A = { 1 ற்கும் - 10 ற்கும் இடையிலுள்ள முதன்மை எண்கள்} தொடைAயின் மூலகங்களை வென்னுருவில் குறித்துக் காட்டுக.

13. உருவில் தரப்பட்டுள்ள பாத்திரத்தை முழுமையாக நிரப்ப தேவையான நீரின் அளவை மதிப்பிட்டு லீற்றரில் தருக.




14. தரப்பட்டுள்ள செவ்வகத்தின் சுற்றளவைக் காண்க.




15. புத்தகமொன்றின் விலை ரூ. $x$ உம் பேனையொன்றின் விலை ரூ. 10 உம் ஆகும். 5 புத்தகங்களினதும் 3 பேனைகளினதும் விலைக்கான அட்சரக் கணித கோவையொன்றை உருவாக்குக.

16. பின்வரும் எண்களை ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்துக.

$\frac{3}{4}$ , 0.2 , $\frac{2}{5}$

17. காணியொன்றை சுற்றி வேலி அடிப்பதற்காக ஒரு சுற்றுக்கு 875 m கம்பி தேவைப்பட்டது. அவ்வாறு 4 சுற்றுகள் அடிப்பதற்கு தேவையான கம்பியின் நீளத்தை km, m யில் தருக.

18. $\frac{3}{5} = \frac{\square}{100}$

(i) பொருத்தமான பெறுமானத்தை இட்டு வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.

(ii) அதனை தசம எண்ணாகத் தருக.

19. A = { MAHATRAGAMA எனும் சொல்லிலுள்ள எழுத்துக்கள்} எனும் தொடையின் எல்லா மூலகங்களையும் இரட்டை அடைப்பிற்குள் எழுதுக.

20. சம்பந்தனின் வயது $x$ வருடங்களாகும். அவரின் தந்தையின் வயது அவரின் வயதின் நான்கு மடங்கிலும் 2 வருடங்கள் அதிகம். இருவரினதும் வயதுகளின் கூட்டுத் தொகை 52 வருடங்களாகும். மேலுள்ள தரவுகளைக் கொண்டு சமன்பாடொன்றை உருவாக்குக.

பகுதி **II**

01. (a) (i) சுருக்குக.

$$\frac{2}{6} + \frac{3}{6}$$ (பு.01 )

(ii) சுருக்குக.

$$\frac{5}{8} - \frac{1}{4}$$ (பு. 02)

(iii) $>$, $<$ அல்லது $=$ குறியீட்டை உபயோகித்து தொடர்புபடுத்துக.

(a) $\frac{1}{2}$ ..................... $\frac{1}{3}$

(b) $\frac{3}{5}$ ..................... $\frac{4}{5}$

(c) $2\frac{1}{3}$ ..................... $2\frac{2}{6}$ (பு. 03)

(iv) நிமலன் தனது காணியின் $\frac{3}{8}$ ஐ மகனுக்கும் $\frac{1}{4}$ ஐ மகளுக்கும் கொடுத்தான். மகனுக்கு மகளை விட அதிகமாக கிடைத்த பங்கு எவ்வளவு? ( பு. 03)

(b) எண் கோட்டைப் பயன்படுத்திச் சுருக்குக.

$(+2) + (-5)$ ( பு.03)

---

02. (a) சுருக்குக.

$2x + 3x$ ( பு. 01)

(b) செவ்வக வடிவப் பூப்பாத்தியொன்றின் அகலம் x மீற்றர் ஆகும். அதன் நீளம் அகலத்தின் இரு மடங்காகும்.

(i) அதன் நீளத்தை x இல் தருக.


(ii) x ஐக் கொண்டு பூப்பாத்தியின் சுற்றளவுக்கான அட்சரக் கணிதக் கோவையை உருவாக்கி அதனைச் சுருக்குக. ( பு.03)

(iii) பூப்பாத்தியின் சுற்றளவு 30m எனின் அதனைக் கொண்டு சமன்பாடொன்றை உருவாக்குக. ( பு.02)

(iv) சமன்பாட்டைத் தீர்ப்பதன் மூலம் பூப்பாத்தியின் நீளம், அகலம் என்பவற்றைக் காண்க. ( பு. 04)

---

03. (a) (i) தரப்பட்டுள்ள கனவுருவின் கனவளவைக் காண்க.





( பு.03)

(ii) $1\,l\ 500\,ml$ பானம் அடங்கிய போத்தலொன்றிலிருந்து 350 ml அகற்றியபின் எஞ்சியுள்ள பானத்தின் அளவைக் காண்க.

( பு.03)

(iii) தரப்பட்டுள்ள பெரிய கனவுருவிற்குள் எத்தனைச் சிறிய கனவுருக்களை அடுக்க முடியும்?




( பு. 03)

(b) இறக்குவானையில் மு.ப. 7.45 ற்கு புறப்பட்ட பேருந்து பி.ப12.30 மணிக்கு மாவனல்லையை அண்மித்தது. பயணத்திற்கு எடுத்த காலத்தைக் காண்க. ( பு. 03)


---

04. (a) (i) 3 cm நீளமுள்ள நேர்க்கோட்டுத் துண்டத்தை வரைக. அதனை AB எனப் பெயரிடுக. ( பு. 03)

(ii) A யை மையமாகவும், AB யை ஆரையாகவும் கொண்டு வட்டமொன்றை அமைக்க. அதன் விட்டத்தின் நீளத்தைக் காண்க. ( பு. 03)


(b) தரப்பட்டுள்ள உருவில்,

(i) புயங்களையும், கோணத்தையும் பெயரிடுக.




( பு. 03)

(ii) தரப்பட்டுள்ள உருக்கள் a, b யில் காரணம் காட்டி குழிவு, குவிவு பல்கோணி எனப் பெயரிடுக.



(a) (b) ( பு. 03)

---

05. (a) 48 எனும் எண்ணை முதன்மைக் காரணிகளின் பெருக்கமாக எழுதி அதனைச் சுட்டி வடிவில் தருக.

( பு. 03)


(b) (i) 0.125 ஐ பின்னமாக எழுதி அதனை எளிய வடிவில் தருக. ( பு.02)

(ii) சுருக்குக.

$(2.12 \div 2) \times 1000$ ( பு. 03 )


(iii) $\frac{1}{2}$ , $\frac{3}{10}$ , 0.7 , 0.07 ஏறுவரிசையில் எழுதுக. ( பு. 04)

06. (a) தரப்பட்டுள்ள நேர்கோடுகளுள் இரண்டு சமாந்தர நேர்கோட்டுச்சோடிகளைப் பெயரிடுக.





( பு. 02)

(b) தரப்பட்ட உருக்களில் சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை யாது?



(i)




(ii)

( பு. 02)

(c) (i) கோணங்களின் பருமன்களுக்கேற்ப முக்கோணி ABC எவ்வகை முக்கோணியாகும் ? ( பு.02)

(ii) இம்முக்கோணியின் அளவுகளுக்கு சமனான அளவுகளுள்ள இன்னொரு முக்கோணியைக் கொண்டு இருமுக்கோணிகளின் பெரிய பக்கங்கள் ஒன்றோடொன்று பொருந்துமாறு வைத்து உருவாகும் தளவுருவை அளவுகளுடன் வரைந்து அத்தளவுருவின் பரப்பளவைக் காண்க. ( பு. 06)




---

07. (a) (i) தீர்க்க.

$2x + 5 = 13$ ( பு.03)

(ii) $2\frac{1}{4}$ m , 10.5 m அளவான 2 நூல் துண்டுகளின் மொத்த நீளத்தைக் காண்க. ( பு. 03)

(b) விலைப் பட்டியலுக்கு ஏற்ப,

<u>விலைப்பட்டியல்</u>

| | | |
|---|---|---|
| அரிசி 1 kg | - | ரூ.70.00 |
| தேயிலை 100g | - | ரூ.85.00 |
| சீனி 500g | - | ரூ.65.00 |
| தேங்காய் 01 | - | ரூ.45.00 |

(i) தேயிலை 50g இன் விலை யாது? ( பு. 01)

(ii) அரிசி 2 kg, சீனி $1\frac{1}{2}$ kg , தேங்காய்கள் 02 என்பவற்றை கொள்வனவு செய்ய தேவையான பணம் எவ்வளவு?

( பு. 03)

(iii) மேலுள்ள பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூ.400 தேவையென நிமலன் கூறினான். இக்கூற்று உண்மையா என விளக்குக. ( பு. 02)